# அக்டோபர் – 17 – செவ்வாய்

### புனித அன்ரியொக் இஞ்ஞாசியார்

### வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன: திபா. 19:1

## முதல் வாசகம் : உரோமையர் 1 : 16 - 25

சகோதர சகோதரிகளே! நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்படமாட்டேன் ஏனெனில், அதுவே கடவுளின் மீட்பளிக்கும் வல்லமை. முதலில் யூதருக்கும், அடுத்துக் கிரேக்கருக்கும்- அதாவது நற்செய்தியை நம்பும் ஒவ்வொருவருக்கும் அந்த மீட்பு உண்டு.ஏனெனில் ”நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வு அடைவர்” என மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா! இவ்வாறு மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் கடவுளின் செயல் நற்செய்தியில் வெளிப்படுகிறது. தொடக்கமுதல் இறுதிவரை இந்தச் செயல் நம்பிக்கையின் அடிப்படையில்தான் நிகழ்கிறது. இறைப்பற்று இல்லா மனிதர்களின் எல்லா வகையான நெறிகேடுகளின் மீதும் கடவுளின் சினம் விண்ணினின்று வெளிப்படுகிறது. ஏனெனில், இவர்கள் தங்கள் நெறிகேட்டினால் உண்மையை ஒடுக்கிவிடுகின்றார்கள்.கடவுளைப் பற்றி அறியக்கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாக விளங்கிற்று. அதைக் கடவுளே அவர்களுக்குத் தெளிவுறுத்தியிருக்கிறார். ஏனெனில் கண்ணுக்குப் புலப்படா அவருடைய பண்புகள் அதாவது, என்றும் நிலைக்கும் அவரது வல்லமையும் கடவுள் தன்மையும் உலகப் படைப்பு முதல் அவருடைய செயல்களில் மனக்கண்களுக்கு தெளிவாய்த் தெரிகின்றன. ஆகவே அவர்கள் சாக்குப்போக்கு சொல்வதற்கு வழியே இல்லை.ஏனெனில், அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்க வில்லை. நன்றி செலுத்தவுமில்லை. அதற்கு மாறாக அவர்கள் எண்ணங்கள் பயனற்றவையாயின. உணர்வற்ற அவர்களது உள்ளம் இருண்டு போயிற்று.தாங்கள் ஞானிகள் என்று சொல்லிக்கொள்ளும் அவர்கள் மடையர்களே.அழிவில்லாக் கடவுளை வழிபடுவதற்குப் பதிலாக அழிந்துபோகும் மனிதரைப்போலவும், பறப்பன, நடப்பன, ஊர்வன ஆகியவற்றைப் போலவும் உள்ள உருவங்களை வழிபட்டனர்.ஆகவே, அவர்களுடைய உள்ளத்தின் இச்சைகளுக்கு ஏற்ப ஒருவரோடொருவர் தங்கள் உடல்களை இழிவுபடுத்துகின்ற ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்யும்படி கடவுள் அவர்களை விட்டுவிட்டார். அவர்கள் கடவுளைப் பற்றிய உண்மைக்குப் பதிலாகப் பொய்மையை ஏற்றுக் கொண்டார்கள் படைக்கப்பட்டவற்றை வழிபட்டு அவற்றுக்குப் பணி செய்தார்கள் படைத்தவரை மறந்தார்கள் அவரே என்றென்றும் போற்றுததற்குரியவர். ஆமென்.

**பதில்பாடல் :** வானங்கள் ஆண்டவரின் மாட்சியை
வெளிப்படுத்துகின்றன

## நற்செய்தி : லூக்கா 11 : 37 - 41

அக்காலத்தில் இயேசு பேசிக்கொண்டிருந்த போது பரிசேயர் ஒருவர் தம்மோடு உணவு அருந்தும்படி அவரைக் கேட்டுக் கொண்டார். அவரும் போய்ப் பந்தியில் அமர்ந்தார். உணவு அருந்து முன்பு அவர் கை கழுவாததைக் கண்டு பரிசேயர் வியப்படைந்தார். ஆண்டவர் அவரை நோக்கிக் கூறியது: ”பரிசேயரே, நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள். ஆனால் உங்களுக்கு உள்ளே கொள்ளையும் தீமையும் நிறைந்திருக்கின்றன.அறிவிலிகளே, வெளிப்புறத்தை உண்டாக்கியவரே உட்புறத்தையும் உண்டாக்கினார் அல்லவா!உட்புறத்தில் உள்ளவற்றைத் தர்மமாகக் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அனைத்தும் தூய்மையாயிருக்கும்“ என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு உணவருந்துவதற்கு முன்பாக தமது கைகளைக் கழுவாமல் சாப்பிடுவதைக் கண்ட பரிசேயர்கள் வியப்படைகிறார்கள். போதகராக இருக்கிறவருக்கு ஒரு யூதன் பின்பற்றக்கூடிய சாதாரண நடைமுறை கூட தெரியவில்லையா? என்பதுதான். அவர்களின் வியப்புக்கு காரணம் பரிசேயர்கள் சட்டங்களுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்தனர், உணவு உண்பதற்கு முன்பாக செய்ய கூடிய ஒழுங்குகள் என பலவற்றை அவர்கள் பின்பற்றினார்கள். இயேசு அவர்கள் வைத்திருந்த சட்டங்களுக்கு எதிராக பேசவில்லை, மாறாக அவர்கள் சட்டங்களை அவர்கள் பின்பற்றுவதில் காட்டக்கூடிய அக்கறையை, மக்களுக்கு நீதி வழங்குவதிலும், இரக்கம் காட்டுவதிலும் காட்டடினால் மிக சிறப்பாக இருக்கும் என்று ஆதங்கப்படுகின்றார். ஒவ்வொரு பாரம்பரிய யூதர்களும் கடவுளுக்கு செலுத்த வேண்டிய காணிக்கையை செலுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர், நிலத்தில் விளைச்சலிலிருந்து பெறப்படும் முதற் கனிகளை ஆலயத்திற்கு காணிக்கையாக செலுத்தினர். இவ்வாறு ஒழுங்குகளையும் சட்டங்களையும் பின்பற்றுவதில் இவ்வளவு அக்கறையோடும் ஆர்வத்தோடும் செய்கின்ற பரிசேயர்கள் மற்றவருக்கு இரக்கம் காட்டுவதிலும், மற்றவர்களை குறிப்பாக ஏழைகளை, அனாதைகளை மதித்து நடத்துவதிலும், அவர்களுக்கு உதவி செய்வதிலும் அக்கறை காட்டாமல் அவர்களை ஒரு பொருட்டாக மதிக்காமல் நடந்தனர். இயேசு இதைப் பார்த்து வியப்படைகின்றார், ஆச்சரியப்படுகின்றார். நமது வாழ்விலும் நாம் இயேசுவின் பாதையில் நடக்க இறையருள் வேண்டுவோம் ஆமென்.